**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**

**FAST TRACK COURT, ARANI.**

**S.C.No.56/2020**

| | | |
|---|---|---|
| **Deposition of Witness for** | **:** | **P.W.5** |
| **Name** | **:** | **திரு. முருகன்.** |
| **Father's Name** | **:** | |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 12.10.2022.**

**முதல் விசாரணை -**

**நான் எட்டிவாடி கிராமத்தில் வசிக்கிறேன். விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். இறந்த கண்ணனை தெரியும். எதிரியை தெரியும். இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள். 16.6.2019 அன்று காலை 6 மணிக்கு சம்பவம் நடந்த இடத்தில் களம்பூர் காவல் நிலையத்தினர் படம் வரைந்திருந்தனர். சம்பவ இடத்தில் இருந்து ரத்த கறை படிந்த மண்ணையும், சாதா மண்ணையும் எடுத்தார்கள். ஒரே ஒரு தேக்கு அடிக்கட்டையை வைத்திருந்தார்கள். அது சம்பந்தமாக கையொப்பம் கேட்டார்கள். நான் கேட்டு கையொப்பம் போட்டேன்.**

பார்வை மகசரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான். என்னுடன் மணிகண்டன் என்பவரும் கையொப்பம் போட்டார். கைப்பற்றுதல் மகசரில் உள்ள கையொப்பம் உன்னுடையதா என்று சாட்சியிடம் கேட்டபோது எனக்கு ஆவணத்தின் பெயர் எல்லாம் தெரியாது. கையொப்பம் போட்டது உண்மை. அந்த பொருட்களை எடுத்தது உண்மை. எனக்கு எழுத படிக்க தெரியாது. கைப்பற்றுதல் மகசரை சாட்சியிடம் காட்டி கையொப்பத்தை பற்றி கேட்டபோது முதல் கையொப்பம் தன்னுடையது தான் என்று சாட்சி சாட்சியம் அளித்தார். பார்வை மகசர் அ.சா.ஆ.2. கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.3.

நீதிமன்றத்தில் உள்ள ரத்தம் தோய்ந்த மண் மற்றும் சாதாரண மண் தான் கைப்பற்றப்பட்டது. கொம்பும் நீதிமன்றத்தில் உள்ளது தான். ரத்தம் தோய்ந்த மண் சான்று பொருள் 3. சாதாரண மண் சான்று பொருள் 4. இதுசம்பந்தமாக போலிசார் அன்றைய தினமே என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

கைப்பற்றுதல் மகசர் மற்றும் பார்வை மகசரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. இறந்த கண்ணன் எனக்கு மாமனார். முன் நாள் என் மாமனாரை ஆம்புலன்சில் அழைத்துச் செல்லும் போது உடன் சென்றேனா என்றால் நான் வேலைக்கு சென்றுவிட்டேன். எனக்கு என் மாமனார் இறந்தது சம்பந்தமாக இரவு 10 மணிக்கு தான் தெரியும். நான் கேள்விப்பட்டு சம்பவ இடம் சென்றபோது எல்லாம் முடிந்துவிட்ட நிலையில் நான் களம்பூர் காவல்நிலையம் சென்று வீட்டிற்கு வந்துவிட்டேன்.

களம்பூர் காவல்நிலையம் சென்றபோது சாமி, சேகர் ஆகியோர்களை எல்லாம் விசாரித்துக்கொண்டு இருந்தனர் என்றால் சரி தான். நான் வெளியில்

நின்றுக்கொண்டு இருந்தேன். அன்றைய தினமே என்னை விசாரித்தனர் என்றால் களம்பூர் காவல்துறையினர் விசாரிக்கவில்லை. நான் முதல் விசாரணையில் சொன்னது போல் போலிசார் சம்பவ இடத்தில் எந்தவொரு விசாரணையும் மேற்கொள்ளவில்லையென்றாலும், முன் நாள் காவல்நிலையம் சென்ற என்னிடம் எழுதப்படாத வெள்ளை தாளில் கையொப்பம் பெற்றுக்கொண்டதை தான் அ.சா.ஆ.2 மற்றும் 3 தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

சாட்சி மணிகண்டன் உறவு இல்லை. ஆனால் தம்பி முறை வைத்து அழைப்பேன். ஊராட்சி மன்ற தலைவர். இறந்தவர் என்னுடைய மாமனார் என்பதால் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க கையொப்பம் போட்டுவிட்டு அதற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-K.Vijaya.
Additional Sessions Judge,
Arani.